## திருச்சபையின் பதிவேட்டுக் குறிப்புகள்

### திருமணம்

| நாள் | பெயர் | நடைபெற்ற இடம் |
|---|---|---|
| 18-01-2010 | G. காட்வின் இராஜாசிங்<br>W. சுஜானா செல்வகுமாரி<br>வில்லிங்ஸ்டன் | CSI. தூயமத்தேயு ஆலயம்<br>கிழக்கு தாம்பரம் |
| 22-01-2010 | D. சாலமோன் பால் ஆபிரகாம்<br>R. வளர்மதி சிந்தியா | CSI. தமிழ் வெஸ்லி ஆலயம்<br>தூய தோமா மலை |

### குடும்ப ஜெப கூடுகை

04-02-2010 வியாழன்

1. திரு. கிருபைராஜன்
6/12, B பிளாக், கிரேஸ் பிளாட்ஸ்
T.N.G.O. காலனி முதல் தெரு,
ஆதம்பாக்கம்
Ph : 22672124

2. திரு. தேவ சகாயம்
16/10, கணேஷ் நகர்
பாஷ்யம் லே அவுட்
ஆதம்பாக்கம்
Ph : 91769 68544

3. திரு. பாக்கியராஜ்
1E, சுனில் பிளாட்ஸ்
ஆபீசர்ஸ் காலனி முதல் தெரு
ஆதம்பாக்கம்
Ph : 2244 3901

11-01-2010 வியாழன்

1. திரு. டேவிட் ராஜ்
10/19, மேட்டு கழனி தெரு
ஆதம்பாக்கம்
Ph : 22453184

2. திருமதி. சிரோன்மணி மோகன்
எண்.68, பிள்ளையார் கோயில் தெரு
மடுவின்கரை, கிண்டி
Ph : 97908 53591

3. திரு. மெல்வின் ஜேம்ஸ்
No.1D, சுனில் பிளாட்ஸ்
ஆபீசர்ஸ் காலனி முதல் தெரு
ஆதம்பாக்கம்
Ph : 98418 68087

26-01-2010 செவ்வாய்கிழமை நமது ஆயர் தலைமையில் பரமன்கேணியில் உள்ள T.W.R. RETREAT CENTRE இல் நடைபெற்ற ஒரு நாள் ஒடுக்க கூட்டத்திலும் கிராம ஊழியத்திலும் பங்கு பெற்ற சபையார் அனைவருக்கும் எங்கள் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். விவரம் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

**சேகரக்குழு அங்கத்தினர்கள்**



தென்னிந்தியத் திருச்சபை - சென்னைப் பேராயம்
ஆலந்தூர் குருசேகரம்

# கிறிஸ்து நாதர் ஆலயம்

36, அழகிரித் தெரு, ஆலந்தூர்,
சென்னை - 600 016.

செய்தி – மடல்

மலர் 23 பிப்ரவரி - 2010 இதழ் 2



## BIBLE CROSSWORD PUZZLE - 40




## Across

1 A place nigh to Joppa (5)
6 We arrived at...................................and tarried at Trogyllium (5)
8 A city in Cilicia (6)
9 The chief ruler of the synagogue (9)
14 A certain Jew born in Pontus, lately come from Italy (6)
15 A place in Pamphylia (5)
16 Simon's surname (5)

## Down

1 One of the cities of Lycaonia (6)
2 A woman who cleaved unto Paul and believed (7)
3 Place where disciples were first called Christians (7)
4 One of the cities of Lycaonia (5)
5 A centurion of Augustus' band (6)
7 Paul chose him (5)
10 A mount, which is from Jerusalem a Sabbath day's journey (6)





## ஏன் ஜெபிக்க வேண்டும்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இறைமைந்தன் இயேசுகிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் உங்களை வாழ்த்துகின்றேன். இந்த மாதத்திலும் ஆண்டவருடைய பெரிதான கிருபை உங்களோடிருந்து உங்களை வழி நடத்துவதாக.

**இயேசு..........தனித்து ஜெபம்பண்ண ஒருமலையின் மேல் ஏறி சாயங்காலமான போது, அங்கே தனிமையாயிருந்தார்.**(மத்தேயு 14 : 23)

இயேசு கிறிஸ்து நம் அனைவருக்கும் ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார். ஏன் ஜெபிக்க வேண்டும், எப்படி ஜெபிக்க வேண்டும், எந்த சூழ்நிலைகளிலெல்லாம் ஜெபிக்க வேண்டும் போன்ற பல முக்கியமான காரியங்களை அவர் நமக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறார். கடவுளை அப்பா, பிதாவே என்று அழைக்கும் உரிமையைச் சொல்லிக் கொடுத்து, கடவுளுக்கும் மனிதனுக்குமிடையேயான உறவினை மேலும் நெருங்கச் செய்திருக்கிறார். (லுக்கா 11 : 2). எனவே நாம் ஜெபிக்கிற நேரங்கள் அனைத்தும், நமது பரம தந்தையிடம் பேசி, நமது பெலவீனங்களை, தேவைகளை, நமது அறிவிற்கு எட்டிய அனேக காரியங்களை அவரோடு பகிர்ந்து, அவரது ஆறுதலின் வார்த்தைகளைக் கேட்டுப் பெற்றுக் கொண்டு பெலனடைதலே ஆகும். கடவுளோடு ஜெபிக்கிற நேரங்கள் உன்னத அனுபவங்கள். கடவுளின் திருமைந்தனாகிய கிறிஸ்துவே, ஜெபிப்பதற்கு, தனிமையாய் தனது தந்தையோடு பேசுவதற்கு நேரத்தை செலவழித்தார். இன்று நாமும் அவ்விதமாய் ஜெபிக்கக் கற்றுக் கொள்தல் அவசியம். நாம் அவ்விதமாக ஜெபிப்பதை கடவுள் விரும்புகிறார். என் மகன்/ மகள் என்னோடு பேசுவானா/ பேசுவாளா! என அவர் விரும்புகின்றார்.

அனேக சமயங்களில் இந்த ஜெபம் - வர்த்தக உடன்பாடு போல் அமைந்து விடுகின்றது. நமது தேவைகளை மட்டுமே வலியுறுத்தி ஜெபிப்பது மிகவும் தவறான பழக்கம். சர்வ சிருஷ்டிக் கர்த்தாவாகிய அவரிடம் மிகவும் சிறியவர்களாகிய நாம் பேசுவது எப்படி அமைந்திருக்க வேண்டும்? ஒரு குழந்தை தனது மழலைக் குரலில் தனது தகப்பனுடன் அன்பாக பேசி மகிழ்வதைப் போல் அமைந்திருக்க வேண்டும் அல்லவா!

ஜெபிக்கக் கற்றுக்கொள்வோம். இயேசுவே ஜெபித்துக் கொண்டிருந்தார். நீங்களும் நானும் எம்மாத்திரம்.

கடவுள் நம்மை ஆசீர்வதிப்பாராக.

இறைவன் இயேசுவின் இனிய திருப்பணியில்,

**அருள்திரு. R. குணசேகரன் கோயில்பிள்ளை**

ஆயர்

## ஜனவரி மாத வேத வினாக்களின் பதில்கள்

1) யோய்தாவின் குமாரன் பெனாயா தாவீதிடம் - I இராஜாக்கள் 1 : 36
2) கேராவின் மகன் சீமேயி - I இராஜாக்கள் 2 : 8, 9
3) முப்பதாயிரம் அமஞ்சி ஆட்கள் - I இராஜாக்கள் 5 : 13
4) ஈராம் - I இராஜாக்கள் 7 : 14
5) எகிப்து - I இராஜாக்கள் 8 : 51
6) சாலொமோன் கொடுத்த பட்டணங்களில்-காபூல் நாடு I இராஜாக்கள் 9:12,13
7) எலியாதாவின் குமாரன் ரேசோன் - I இராஜாக்கள் 11 : 23, 25
8) அகியா தீர்க்கதரிசி - யெரொபெயாமுக்கு பத்து, தாவீதுக்கு ஒன்று, சாலொமோனுக்கு ஒன்று என பன்னிரண்டு துண்டுகளாக-I இராஜாக்கள் 11 : 30,31,32,36
9) ராஜாவாகிய ரெகொபெயாம் இரண்டு பொன் கன்றுக்குட்டிகளை உண்டாக்கி பெத்தேலிலும் தாணிலும் ஸ்தாபித்தான். இது பாவமாயிற்று - I இராஜாக்கள் 12 : 28, 29,30
10) ஒரு சிங்கம் அவனை கொன்று போட்டது - I இராஜாக்கள் 13 : 22,24
11) யெரொபெயாமின் மனைவி - I இராஜாக்கள் 14 : 2, 3, 4 அகியா தீர்க்கதரிசியிடம்
12) எகிப்தின் ராஜா சீஷாக் எருசலேமிலிருந்து பொன் பரிசைகளை எடுத்து சென்று விட்டபடியால் - I இராஜாக்கள் 14 : 26, 27
13) அபியாம், தப்ரிமோர் - I இராஜாக்கள் 15 : 8, 18, 19
14) சிம்ரி - ஏழு நாட்கள் - I இராஜாக்கள் 16 : 15
15) அபிராம், செகூப், யோசுவாவின் சாபம். I இராஜாக்கள் 16:34,யோசுவா 6 : 26
16) ஒபதியா - I இராஜாக்கள் 18 : 7, 12
17) பாகால் - I இராஜாக்கள் 18 : 27
18) சிங்கம் அவனை கொன்று போட்டது - I இராஜாக்கள் 20 : 36
19) ஆகாப் எலியாவிடம் - I இராஜாக்கள் 21 : 20
20) கர்த்தருடைய ஆவியை - I இராஜாக்கள் 22 : 24, 25
21) சாலொமோனுக்கு ஒவ்வொரு வருஷத்திலும் பரிசாக வந்த பொன்னின் நிறை அறுநூற்று அறுபத்தாறு தாலந்துகள் - I இராஜாக்கள் 10 : 15
22) சேமேர் - I இராஜாக்கள் 16 : 24
23) மூவாயிரம் நீதிமொழிகள். ஆயிரத்து ஐந்து பாட்டுக்கள்-I இராஜாக்கள் 4:32
24) பாவம் - I இராஜாக்கள் 8 : 46
25) I இராஜாக்கள் 19 : 10, 14

குறிப்பு

**1. ஆங்கில குறுக்கெழுத்து போட்டியின் பதில்களிலும் பெயர் எழுத வேண்டும்.**
**2. விடைகள் கிடைக்க வேண்டிய கடைசி தேதி 21-2-2010**



3. சிலுவை தாங்கு மீட்பர் பின்
அவரின் சீஷனாகவே
சிலுவை தாங்கு, பாரத்தால் கோழை
நெஞ்சோனாய் அஞ்சிடாய்
சிலுவை தாங்கு, மேட்டிமை கொள்வாய்
எந்நிந்தை எண்ணிடாய்
சிலுவை தாங்கி கிறிஸ்துவை பின்
செல்வாய் ஆயுள் முற்றுமே - பாமாலை 312

கத்தோலிக்கர்களின் மதத்தலைவரான போப்பாண்டவர் முதல் நமது தென்னிந்திய திருச்சபை பேராயர் வரை சிலுவை அடையாளத்தை தங்கள் மார்பினில் அணிந்திருக்கின்றார்கள். தனி மனித, உருவ வழிபாட்டினை மறுத்து ப்ரொட்டஸ்டன்ட் பிரிவினை தோற்றுவித்த மார்டின் லூத்தரும் கூட சிலுவை அடையாளத்தை மறுக்கவில்லை.

இப்பெருமைகளைப் பெற்றதால்தான் நாம் சிலுவையை நமது ஆலயங்களில் உள்ள ஆல்டர்களிலும், கோபுர உச்சியிலும், ஆலய வாசல்களிலும் வைத்திருக்கின்றோம். நாம் அன்றாடம் அணியும் நகைகளிலும் சிலுவையை பதிக்கின்றோம்.

**ஆகவே சிலுவையை அடையாளமாக வைத்திருப்பது உருவ வழிபாடல்ல,** ஏனென்றால் சிலுவையானது ஒவ்வொரு கிறிஸ்தவதுடைய வாழ்வில் ஒன்றாக இணைந்து பின்னி பிணைந்திருக்கின்றது.

சிலுவை என்பது புனிதசின்னம் (SACRED) தியாகச் சின்னம் (SACRIFICE) காக்கும் சின்னம் (PROTECT) பாடுகளின் சின்னம் (SUFFERING) சாட்சியின் சின்னம் (WITNESS)

இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாளை கொண்டாடிய நாம் இப்புது வருஷத்தில் அவர் நமக்காக சிலுவையில் பட்ட பாடுகளை எண்ணி, நம்மை நாமே தற்பரிசோதித்து வாழ்வோமாக.

**GOD BLESS YOU ALL IN THIS NEW YEAR 2010**

**ஜெயக்குமார் டேவிட்**
**சபை செயலாளர்**

செல்வி. A. மெர்லின்
திரு. ஜோயல் ஜெயந்த்

22-02-2010
திரு. J.ஆசீர்வாதம் அசாரியா சாமுவேல்

23-02-2010
திரு. M.S. பால்
திருமதி. P. ஸ்வேதா
செல்வி. அன்னாள் மெட்டில்டா

24-02-2010
திரு. பென்ஜமின் பென்டைட்
செல்வி. ஜெபிலா விக்டோரியா
மாஸ்டர். R. ரிச்சர்ட் இம்மானுவேல்
திருமதி. J. செல்லம் ஜெரினா
திரு. D. இராஜ மாணிக்கம்

26-02-2010
திருமதி. S.C.S. முத்துராஜ்
திருமதி. சபினா ராஜன்
திருமதி. ஜெயந்தி
திருமதி. பிரேமா ஜோதிபால்

27-02-2010
திருமதி. ஜேன் பரமானந்தம்
திரு. மஞ்ஜேஷ் ராய்

28-02-2010
திருமதி. ஷிபா தேவராஜ்
திருமதி. P. ஞானமணி

29-02-2010
மாஸ்டர். கெவின்

## பிப்ரவரி மாதம் தித்திக்கும் திருமண நாள் காணும் அன்பர்கள்

03-02-2010
திருமதி & திரு. S.K. மனோகரன்

04-02-2010
திருமதி & திரு. S. ஆன்டனி கஸ்பர் ராஜேஷ்
திருமதி & திரு. P. சாமுவேல் வேலுசாமி
திருமதி & திரு. பாபு ராஜ சேகர்
திருமதி & திரு. M.A. நெல்சன்
திருமதி & திரு. டேனியல் தேவ நேசன் இம்மானுவேல்

05-02-2010
திருமதி & திரு. சகாரியா தேவ தயவு
திருமதி & திரு.S. சாம்ராஜ்

07-02-2010
திருமதி & திரு. P. தன்ராஜ்
திருமதி & திரு.S. எட்வின் தேவராஜ்
திருமதி & திரு. S.P. நேசன்
திருமதி & திரு.அருள் மாணிக்கம்
திருமதி & திரு. J. செல்லதுரை
திருமதி & திரு.சித்திரை பாண்டியன்
திருமதி & திரு.S.P. தேவகுமார்

08-02-2010
திருமதி & திரு. P.C. அய்யாதுரை

09-02-2010
திருமதி & திரு. G. பால்

10-02-2010
திருமதி & திரு. R. ஜெயக்குமார்

12-02-2010
திருமதி & திரு. I. ராஜாஹி
திருமதி & திரு.செல்வம் ஜோசப் வாட்ஸ்

13-02-2010
திருமதி & திரு. லாரன்ஸ் கிருஸ்டோபர்

14-02-2010
திருமதி & திரு. D. சிலுவைராஜ்

15-02-2010
திருமதி & திரு. பால் சேகர்

16-02-2010
திருமதி & திரு. A. டேவிட் ராஜ்
திருமதி & திரு. டேவிட்
திருமதி & திரு.ராஜ பக்தசிங்

19-02-2010
திருமதி & திரு. C. விஜயகுமார்

20-02-2010
திருமதி & திரு. சாம் சுந்தர்சிங்
திருமதி & திரு. D. ஆன்டனி பெர்னாட்ஷா

23-02-2010
திருமதி & திரு. ஸ்டிபன் தாமஸ்

24-02-2010
திருமதி & திரு. அருண் தேவகுமார்

25-02-2010
திருமதி & திரு. செல்வராஜ் ஐசக்



3. கர்த்தரின் இரக்கம் (God's Mercy) "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே மறு ஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். (தீத்து 3 : 5)
4. கிறிஸ்துவினால் மட்டுமே (CHRIST ALONE) "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படுப்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லை" (அப் 4 : 12)
5. சிலுவை (CROSS) "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கு அது தேவ பெலனாயிருக்கிறது" ( 1 கொரி 1 : 18)

ஆம், கடவுளின் அளவற்ற அந்தக் கிருபையினாலும், அவரின் விலைமதியா அன்பினாலும், அவருடைய மகா இரக்கத்தினாலும் மீட்கப்பட்டோம். நாம் சந்தோஷமாகவும், சமாதானமாகவும் பிறரோடு ஒற்றுமையாகவும் வாழ்கிறோம்.

நமக்குள் ஒரு உறுத்தல் உள்ளது. நாம் கடவுளின் இரட்சிப்பைப் பெற்ற நீதிமான்களாயிருக்கிறோமா? அல்லது மற்ற விசுவாசிகளுக்கு முன்மாதிரியா நடந்து கொள்கிறோமா? நாம் சுவிசேஷ ஊழியத்தை உண்மையா செய்கிறோமா? அல்லது ஊழியங்களை தாங்குகிறோமா? இதன் மூலம் கிறிஸ்துவின் நாமம் இந்த நாட்டில் மூலை முடுக்கல்லாம் மகிமைப்பட பாடுபடுகிறோமா? சிந்தித்து செயல்படுவோம். இந்த புதிய ஆண்டில் இப்பணியில் ஓர் அங்கமாக இணைந்து செயல்பட கடவுள் நம்மை வழி நடத்துவராக.

இந்த ஆண்டுக்கான கடவுளின் வார்த்தை யோவேல் 2 : 26 "நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள். என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டு போவதில்லை."

அதேபோன்று நீங்கள் மத்தேயு 6ம் அதிகாரம் வசனங்கள் 25--33 இதனை வாசித்து நன்கு தியானியுங்கள் முக்கியமாக வசனம் 33ல் "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் : அப்போது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்."

இந்த வாசகத்தை முடிக்குமுன் நான் உங்கள் எல்லாரையும் வேண்டிக் கொள்கிறேன். "உலகத்தில் நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போது மென்றிருக்கடவோம்" (1 தீமோ 6 : 7, 8). அதற்காக நாம் கடவுளுக்கு நன்றி செலுத்துவோம்.

மனதின் ஆழத்திலிருந்து கர்த்தர் நமக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காக ஸ்தோத்திரம் செலுத்துவோம். இப்புதிய ஆண்டினை மன மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம். கர்த்தர் தாமே நம்மை வழி நடத்துவார். ஆமென்.

**Dr. G. கோயில் பிள்ளை**

## ஆராதனை ஒழுங்கு முறைகள் --- பிப்ரவரி 2010

| நாள் | நேரம் | செம்பொருள் | நடத்துனர் / செய்தியாளர் |
|---|---|---|---|
| 01-02-10 திங்கள் | காலை 6.30 | மாதத்தின் முதல் நாள் - பரி. நற்கருணை | ஆயர் |
| 02-02-10 செவ்வாய் | காலை 6.30 பரி.நற்கருணை | **கிறிஸ்து பிரதிஷ்டை பண்ணப்பட்ட திருநாள்** | ஆயர் |
| 05-02-10 வெள்ளி | மாலை 6.30 | மாலை ஆராதனை | திரு. முத்துராஜ் |
| 07-02-10 ஞாயிறு | காலை 8.30 பரி.நற்கருணை | **பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு இறைமக்களின் குணமாக்கும் பணி** II இராஜாக்கள் 5 : 1-14, சங்கீதம் 6, 1 தீமோத்தேயு 1 : 12-19, மாற்கு 7 : 31-37 | ஆயர் |
| | மாலை 5.00 | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை | திரு. மால் ஜேம்ஸ் |
| | மாலை 6.30 | மாலை ஆராதனை | ஆண்கள் ஐக்கிய சங்கம் திரு. J. கிளாட்சன் |
| 12-02-10 வெள்ளி | மாலை 6.30 | மாலை ஆராதனை | திரு. கிறிஸ்டிராஜ் |
| | இரவு9.30 | இரவு விழிப்பு ஜெபம் செய்தி --சகோதரர். பிளெஸ்ஸிங் ஸ்டேன்லி | வாலிபர் ஐக்கிய சங்கத்தினர் |
| 14-02-10 ஞாயிறு | காலை 8.30 | **பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் ஆறாம் ஞாயிறு----வாழ்வின் வரைமுறை** எசேக்கியேல் 18 : 1-19, சங் 119 : 33-40, யாக்கோபு 2 : 8-13, மத்தேயு 5 : 17-20 | ஆயர் |
| | மதியம் 3.30 | அம்பேத்கார் நகர் - நற்செய்திப்பணி | |
| | மாலை 6.30 | பரி. நற்கருணை | ஆயர் |
| 17-02-10 புதன் | காலை 6.30 பரிநற்கருணை | **சாம்பற் புதன்கிழமை சிலுவை - சுய ஒழுக்கம் மற்றும் பிறருக்காக வாழும் அடையாளம்** எரேமியா 9 : 17-21, சங்கீதம் 43 : 1-5, கலாத்தியர் 6 : 11-18, மாற்கு 10 : 32-34 | ஆயர் |



## பிப்ரவரி மாதம் இனிய பிறந்த நாள் காணும் அன்பர்கள்

01-02-2010
திரு. சாலமன் பால் ஆபிரகாம்
செல்வி. K. ஷோபனா

02-02-2010
பேபி. ஜெபலினா பாலின்
திரு. M.பர்னபாஸ்
திருமதி. ஜெஸி மார்டின்
திரு. D. ஜோஸப் தினகர்
மாஸ்டர். D. ஆரோன் பிரின்ஸ் காட்சன்

03-02-2010
திரு. G. ஆல்வின்
பேபி. ஷெரின் இங்கர் சால்

04-02-2010
Dr.A. அல்போன்ஸ் இம்மானுவேல்

05-02-2010
திரு. D. மனோஜ் பிரபாகர்
திரு. S. ஜார்ஜ் சாமுவேல்
திருமதி. M. தேவி மாணிக்கம்

06-02-2010
திருமதி. ஜெயபுஷ்பம் ஜான்ஸன்
திரு. T. ஜெய பாண்டி
திருமதி. ஜெசூனா டிக்ஸன்

07-02-2010
மாஸ்டர். A. ஜான் சாமுவேல்
திரு. G. தேவராஜ்
திருமதி. உஷா சுந்தர்

08-02-2010
திருமதி. சபினா ஜோசப்
செல்வி. ஸ்வீட்டி மேக்டலின்
திரு. ஜெயபாண்டியன்
மாஸ்டர். G. மோரிஸ்
திரு. கெவின் கெஸ்டர் ஜோஸப்
திரு. V. கிருஸ்டோ செல்வகுமார்

09-02-2010
திருமதி. மேரி ஞானபிரகாசம்
திருமதி. எஸ்தர் ஆன்ட்ரூஸ்
Dr. தாமரை செல்வன்
திரு. A.P. சுந்தர்குமார்

10-02-2010
Dr.R.W. அலெக்ஸாண்டர் ஜேசுதாசன்
மாஸ்டர். R. பிரியன்

11-02-2010
திரு. D. சிலுவை ராஜ்
திரு. M. ஆரோன் ராபர்ட்ஸ்
திரு. ஸ்டிபன் தாமஸ்
பேபி. ஆட்லின் பெனிஷியா

12-02-2010
திரு. பால் ஜூலியன் ஸ்வார்ட்ஸ்
திருமதி. பியுலா அகஸ்டஸ்
திரு. டேனியல் கிளாட்சன்
திருமதி. சாந்தி செல்வின்

13-02-2010
திரு. சுஜாதா ஸ்டான்லி

14-02-2010
பேபி. B.நியுலின் பெனிஷியா
செல்வி. பிரியங்கா பிரியதர்ஷினி
திரு. டேனியல் ராஜா சிங்

16-02-2010
திரு. S.சாம்ராஜ்
திருமதி. ஷிபா ஜெனிபர்
திரு. டேவிட் விஜயகுமார்

17-02-2010
திருமதி. சந்தியா ஏசு ரத்தினம்
திருமதி. லிடியா தேவசகாயம்

18-02-2010
மாஸ்டர். A. அன்சோ கிரிப்ரெட் ஜேசன்

19-02-2010
திருமதி. தீபா மனோகரன்
திருமதி. இளவரசி மேகலா
செல்வி. M. ஹெலன் ஏஞ்சலின்
திரு. M. தேவசகாயம்
திரு. P. பிரகாஷ் எபினேசன்
திரு. பிரட்ரிக் பிரேம் குமார்

20-02-2010
திருமதி. கேரோலின் இம்மானுவேல்
திருமதி. ஜெயகிருபை மனோகரன்
திருமதி. லித்திஷியா தாமஸ்
செல்வி. D. பானுமதி

21-02-2010
செல்வி. P. எமிலி சுகுணாபாய்
Dr. ஆன்டனி சைமன் அரிஅரன்
திரு. செல்வம் ஜோசப் வாட்ஸ்

# புதிய ஆண்டில் பூரிப்பாகுங்கள்

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற சொல்லுக்கிணங்க 2009ம் ஆண்டு நிறைவடைந்து நம்மை விட்டு கடந்து சென்று விட்டது. புதிய ஆண்டு 2010 நம்முன் நிற்கிறது. நாம் நமது கடந்து வந்த பாதையினை (வாழ்வினை) எண்ணிப் பார்த்து மகிழ்கிறோம். கடவுளுடைய கிருபையினாலே நாம் புதிய ஆண்டிற்குள் பிரவேசித்திருக்கிறோம். நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டுமே! கடந்த ஆண்டிலிருந்த நம்மில் அநேகர் இந்தப் புதிய ஆண்டைக் காண உயிருடன் இல்லை. அதே நேரத்தில் இந்தப் புதிய ஆண்டிற்குள் பிரவேசித்துள்ள அநேகர் ஆரோக்கியத்துடன் இல்லை. குடும்பப்பிரச்சனை, கடன் தொல்லை, வேலையின்மை போன்றவைகளால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளார்கள். இந்நிலையில் கர்த்தர் நம்மை சுகத்தோடும், பெலத்தோடும், சந்தோஷத்தோடும், இந்தப் புதிய ஆண்டைக் காணச் செய்தாரே! அவருக்கு நன்றி செலுத்துவோம். மரித்தவர்களைவிட நாம் பரிசுத்தராக இருப்பதினாலல்ல, கர்த்தருடைய சுத்த கிருபையினாலே நாம் இந்த ஆண்டிலும் வாழ அனுமதிக்கப்பட்டுள்ளோம்.

நாம் கர்த்தருக்கு நன்றி லுெத்தும் வேளையில், அவர் நம்மைக் குறித்து மகிழ்ச்சியடைந்திருக்கிறாரா என்றும், என் மகன், என் மகள், என் குடும்பம் கடந்த ஆண்டிலே எனக்கு மிகவும் பயனுள்ளவர்களாக இருந்தார்கள் என்று சொல்லக்கூடிய அளவில் வாழ்ந்தோமா? உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள்.

கர்த்தருக்குப் பிரியமில்லாத சில காரியங்களோடு, சில கீழ்படியாமைகளோடு, இந்த ஆண்டிற்குள் பிரவேசித்திருப்போமானால், சரிப்படுத்த வேண்டிய காரியங்களை இன்றே சரிப்படுத்துவோம். கீழ்படிய வேண்டிய காரியங்களுக்கு கீழ்ப்படிவோம்.

இதைத்தான் தாவீது ராஜா 116ம் சங்கீதத்தில் 12,13,14ம் வசனங்களில் தன்னுடைய விண்ணப்பத்தை ஏறெடுத்துள்ளார். “கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருடய நாமத்தைத் தொழுது கொள்வேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்.” நாம் என்ன செய்தோம்? இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு அவருடைய நாமத்தை தொழுது கொண்டோமா? இல்லையே!
இரட்சிப்பைப் பெற்ற நாம், அந்த இரட்சிப்பு கர்த்தரிடத்திலிருந்து எவ்வாறு நமக்கு பெறப்பட்டது என்பதை கீழ்கண்ட வேதாகம வசன அடிப்படைகளின் மூலம் அறிந்து கொள்ளுவோம்.

1. கர்த்தரின் கிருபை (God’s Grace) “அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு” (எபேசியர் 2 : 5, 8)
2. கர்த்தரின் அன்பு (God’s Love) “நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்கா மரித்ததினாலே, தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோமர் 5 : 8)



# பிப்ரவரி மாத வேத வினாக்கள்
## தொகுத்தவர் : திருமதி. பிரேமலதா ஜோதிதாஸ்
## வேத பகுதி : II இராஜாக்கள்

1) எலியாவின் வாக்குப்படி அக்கினி இறங்கி எத்தனை பேரை பட்சித்தது? எத்தனை பேர் தப்பினார்கள்?
2) இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாய் இருந்த இருவர் யார்?
3) கர்த்தரின் பார்வைக்கு எது அற்ப காரியம்?
4) அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது. எவளுடைய?
5) ஒன்றைக் கேட்டு இரண்டை பெற்றுக் கொண்டான். எவன்? எதை?
6) எது எண்பது வெள்ளிக் காசுக்கும் எது ஐந்து வெள்ளிக்காசுக்கும் விற்கப்பட்டது?
7) தன்னை நாய் என்று வர்ணித்துக் கொண்டவன் யார்?
8) எது கொஞ்சம் ? எது மிகுதி?
9) சபிக்கப்பட்ட ஸ்திரி யார்?
10) மாத்தான் - யார்?
11) மரித்தவனால் மரித்தவன் உயிர் பெற்றது எங்கே?
12) பெனாதாத் எத்தனை முறை யாரால் முறியடிக்கப்பட்டான்?
13) எருசலேமின் அலங்கம் எத்தனை முழம் இடிக்கப்பட்டது?
14) இவன் ராஜாவை கொன்று ராஜாவானான். இவனும் வெட்டிக் கொலை செய்யப்பட்டான். இவன் யார்? எவ்வளவு காலம் அரசாண்டான்?
15) பலி பிடத்தின் சாயலையும் அதின் மாதிரியையும் யார் யாருக்கு அனுப்பினான்?
16) இகழ்ந்து பரிகாசம் பண்ணுவது யார்? பின்னாலே தலையை துலுக்கியது யார்?
17) மறுபடியும் கீழே வேர் பற்றி மேலே கனி கொடுப்பவர்கள் எந்த வம்சத்தார்?
18) எது லேசான காரியம்?
19) எசேக்கியா பதினைந்து வருடம் ஆயுள் நீட்டிப்பு பெற்றதற்கு எந்த பழம் உதவியது?
20) எருசலேமின் மேல் எதைப் பிடிப்பேன் என்று கர்த்தர் கூறுகிறார்?
21) சிதேக்கியாவை எங்கு, எப்படி கொண்டு போனார்கள்?
22) முதல் காணிக்கைப் பெட்டி யாரால் செய்யப்பட்டு எங்கு வைக்கப்பட்டது?
23) “ஆகையால்” என்ற பதத்திற்கு உண்டான ஆங்கில சொல் எந்த ராஜாவை குறிக்கிறது?
24) 19 : 35 “அவர்கள் எல்லாரும் செத்த பிரேதங்களாக கிடந்தார்கள்.” அப்படியானால் சாகாத பிரேதம் என்பது உண்டா? மொழிபெயர்ப்பு சரியாக அமையவில்லை. இந்த வசனத்தில் ஒரு வார்த்தையில் உள்ள எழுத்தை மாற்றியமைத்தல் மொழிபெயர்ப்பு சரியாகும். அது என்ன?
25) இயேசுவுக்கு அடுத்து அதிக அற்புதங்களை செய்திருக்கிறார்? இவர் யார்? செய்த அற்புதங்கள் எத்தனை?

# சிலுவையும் உருவ வழிபாடும்

சிலுவை (cross) நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் அடையாள சின்னமாக கருதப்படுகிறது. அக்காலத்தில் சிலுவையில் அறைப்படுவது மிகவும் இழிவானதாக கருதப்பட்டது. அந்நிலையில், மன்னுயிர்களை மீட்பதற்காக கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தன் உயிரை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, மரித்து, மீண்டும் உயிர்த்தெழுந்தார். அவ்வாறாக அவர் சிலுவையில் மரித்ததினால் சிலுவை மேன்மை பெற்றது. அது ஒரு புனித சின்னம் ஆகியது. எனவேதான் நாம் சிலுவை காட்சியை ஆலயத்திலும் வீடுகளிலும், பள்ளிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றிலும் நீக்கமற காண்கிறோம்.

குழந்தை பிறந்து தொட்டிலில் இடும்போது அதன் நெற்றியில் சிலுவை அடையாளத்தை வரைந்து தொட்டிலில் விடுகின்றோம். குழந்தைக்கு பெயரிடும் போது ஆயரானவர், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் சிலுவை அடையாளத்தை குழந்தையின் நெற்றியிலிடுக்கிறார். எனவே தான், விசேஷமாக ப்ரொட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்கள், நம் நெற்றியில் பிற மதத்தினரைப் போல, அலங்காரத்திற்காக திலகமிடுவதில்லை. எவ்வாறு பழைய ஏற்பாட்டு காலத்தில், நிலைக்கதவில் இரத்தம் தெளிக்கப்பட்டபோது சங்கார தூதன் அந்த இல்லங்களை தவிர்த்து சென்றானோ, அது போலவே நாம் காக்கப்படும்படி நமது நெற்றியில் சிலுவையை சுமக்கிறோம்.

சிலுவை ஒரு தியாகச் சின்னம், ஆலயத்தில் சிலுவையை முன் வைத்து கர்த்தரை தொழுது கொள்கின்ற நாம், காத்தர் நமக்காக சிலுவையில் பட்ட காயங்களை நினைவு கூர்ந்து நம்மை சீர்படுத்திக் கொள்ள முற்படுகின்றோம்.

சிலுவையை பற்றிய பாடல்களை காணுவோம்.

1. சிலுவை மரத்திலே
இயேசுவை நான் நோக்கவே
என்னை பார்த்தழைக்கிறார் - பாமாலை 281

2. சிலுவை சுமந்தோனாக
இயேசு உம்மை பற்றுவேன்
மோட்ச வீடு நாடுவேன் -பாமாலை 311



## சரியான விடை எழுதியவர்கள்

1. திரு. ஜான் ஆல்வின்
2. Dr.G. கோயில் பிள்ளை
3. Dr. ஜான் ஹரிஹரன்
4. திரு. வில்லியம் ஜெயம்
5. திரு. V. ஜெபராஜ்
6. திரு.T. ஜெய பாண்டி
7. திருமதி. ஷோபனா ஜெயராஜ்
8. திருமதி. மேபல் மனோகரன்
9. திருமதி. பாலின் டேனியல்
10. திருமதி. பிரேமா அகஸ்டின்
11. திருமதி. மெர்லின் ராஜமாணிக்கம்
12. திருமதி. ஹெப்சிபா பொன்ராஜ்
13. திருமதி. ஜாஸ்லின் ஜாஷ்வா
14. திருமதி. புஷ்பா தீபன்
15. திருமதி. வெர்ஜுலியா ஆனந்த்
16. திருமதி. ஷீலா பிரேமகுமாரி
17. திருமதி. ஷீபா ஜுலியன்
18. திருமதி. சுஜி தினகரன்
19. திருமதி. R. விஜிலா ஜாஸ்மின்
20. திருமதி. I. விக்டோரியா
21. திருமதி. ஜெனிபர் டேவிட்
22. திருமதி. ஹேனா ஹென்றி
23. திருமதி. D. எஸ்தர்தாஸ்
24. திருமதி. கமலா ராஜாமணி
25. திருமதி. செல்லம் ஜெரினா
26. திருமதி. சாராள் சாமுவேல்
27. திருமதி. R. ஜெப ஷீபா
28. திருமதி. ஜுலி கிறிஸ்டோபர்
29. திருமதி. டல்ஸி முத்துராஜ்
30. திருமதி. எஸ்தர் சாந்தகுமாரி
31. திருமதி. அல்லிராணி காட்வின்
32. திருமதி. எப்சிபா ஸ்வித்தின்
33. திருமதி. சந்திரா ஜாஸ்பர்
34. திருமதி. மேக்டலின் வெல்சன்
35. திருமதி. உஷா டேவிட்
36. திருமதி. டெய்ஸி எட்வின்
37. திருமதி. குணசீலி லிவிங்ஸ்டன்
38. திருமதி. விஜயராணி பெஞ்சமின்
39. திருமதி. கிறிஸ்டல் சாம்ராஜ்
40. திருமதி. மார்டின் நல்லதம்பி
41. திருமதி. அருணா மில்டன்
42. திருமதி. ரோசிற்றா ராஜேந்திரன்
43. திருமதி. ரமோலா ஃபெலிக்ஸ்
44. திருமதி. கனி வீட்ஸன்
45. திருமதி. குளோரி ஜெயக்குமார்
46. திருமதி. தேவி ஸ்டான்லி
47. திருமதி. ஈடித் டேனியல்
48. திருமதி. ஹன்னா சன்பீம்
49. திருமதி. ஷோபா விக்டர்
50. திருமதி. ராஜகுமாரி ஐயாதுரை
51. செல்வி. E. டெல்ஷியா
52. செல்வி. ஜோசபின் திலகவதி
53. செல்வி. கேத்ரின் ரெஜுலா
54. செல்வி. எஸ்தர் பிரியங்கா

## ஆண்கள் ஐக்கிய சங்கம்

07-02-2010 - ஞாயிறு மாலை 5.00 PM - ஐக்கிய சங்க கூடுகை
செய்தியாளர் - **திரு. மால்ஜேம்ஸ்**

07-02-2010 - ஞாயிறு மாலை 6.30 PM - மாலை ஆராதனை
செய்தியாளர் - சகோதரர். **J. கிளாட்சன்**
வேதாகம சங்கம்

21-02-2010 - ஞாயிறு மாலை 3.30 PM - மருத்துவமனை சந்தித்தல்

27-02-2010 - சனிக்கிழமை மாலை 6.30 - ஜெப கூடுகை

## பெண்கள் ஐக்கிய சங்கம்

06-02-2010 - சனிக்கிழமை 5.00 PM - ஜெபக்கூட்டம் (ஆலயத்தில்)

13-02-2010 - சனிக்கிழமை 5.00 PM - ஜெபக்கூட்டம்
இடம் : திருமதி. எஸ்தர் எபன்
எண்.1,A1 பிளாக், மூன்றாம் மாடி
மஹாலஷ்மி அபார்ட்மென்ட்
ஆதம்பாக்கம், போன் : 2245 1086

20-02-2010 - சனிக்கிழமை 11.00 AM - உபவாச ஜெபக் கூட்டம் (ஆலயத்தில்)

27-02-2010 - சனிக்கிழமை 5.00 AM - வேத வினா போட்டி (ஆலயத்தில்)
வேத பகுதி : யாக்கோபு, I பேதுரு, II பேதுரு

## வாலிபர் ஐக்கிய சங்கம்

## ஆலய மாதாந்திர இரவு விழிப்பு ஜெபம்

நாள் : 12-02-2010 வெள்ளிக்கிழமை

நேரம் : இரவு 9.30 முதல் 12.00 வரை

செய்தியாளர் : **சகோதரர். பிளெஸ்ஸிங் ஸ்டேன்லி**

13-02-2010 சனிக்கிழமை -ஜெப கூடுகை
இடம் திரு. ஜோஷ்வா கிங்ஸ்லி
எண்.1,A1 பிளாக், மூன்றாம் மாடி
மஹாலஷ்மி அபார்ட்மென்ட்
ஆதம்பாக்கம், போன் : 2245 1086



11 Simeon was called............................(5)
12 The Jews assaulted his house (5)
13 The great goddess (5)

**Note :**
1. When you have completed this puzzle, re-arrange the letters in the circles to identify the title of this puzzle. Apart from the word 'of', some numbers have been placed in the correct boxes to give you a start.

2. The clues and answers pertaining to this puzzle have all been taken from the King James' version of 'The Holy Bible.'

### ANSWERS TO THE PUZZLE - 39
### HIS LIFE

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| L | I | G | H | T | | M | A | R | T | H | A |
| I | | O | | | | | | | Y | | N |
| L | | D | | S | | | H | E | R | | D |
| I | | | | Y | O | K | E | | E | | R |
| E | Y | E | | R | | | R | | | | E |
| | | | | I | | C | O | R | N | | W |
| | C | A | N | A | | | D | | | | |
| F | | | A | | F | A | I | T | H | | J |
| R | | F | I | G | | | A | | | | O |
| U | | | N | | | A | S | K | | | S |
| I | | | | | | | | | | | E |
| T | H | O | M | A | S | | F | O | X | E | S |

**Correct answers received from the following persons (in alphabetical order) :**

1. Mrs. Alli Rani Godwin
2. Mrs. Aruna Milton
3. Master.Benhur Winston
4. Miss. P. Catherine Rejula
5. Mrs.Chandra Jasper
6. Mrs. Christal Samraj
7. Ms. Christina Oliver
8. Mrs. Daisy Edwin
9. Mrs. Devi Stanley
10. Mr. D.F. Dulip Singh
11. Master. K.Godjin Sam
12. Mrs. Hephzibah Swithin Immanuel
13. Mr. P. Immanuel Selvasingh
14. Mr. V. Jebaraj
15. Mr. John Alwyn
16. Mrs. Joslyn Joshua
17. Mrs. Julie Christopher
18. Dr. G. Koilpillai
19. Mrs. Magdaline Welson
20. Ms. W. Monica Jennifer
21. Master. M. Moses
22. Mrs. Pauline Daniel
23. Mrs. Priscilla Sam Sundar
24. Mrs. Priya Daniel
25. Mrs. Priya Ranjith
26. Mrs. Pushpa Deepan
27. Mrs. Sarah Samuel
28. Mrs. Suji Dhinakaran
29. Mrs. Vijayarani Benjamin
30. Mrs. Virgilia Anand
31. Mr. William Jeyam
32. Mrs. Prema Augustin

**Note : There were no names found in two entries**

## ஆராதனை ஒழுங்கு முறைகள் தொடர்ச்சி - பிப்ரவரி 2010

| நாள் | நேரம் | செம்பொருள் | நடத்துனர் / செய்தியாளர் |
|---|---|---|---|
| 19-02-10 வெள்ளி | காலை 6.30 பரி.நற்கருணை | **தபசு கால முதல் வெள்ளி - அப்போஸ்தலரும் இரத்த சாட்சியுமான தூய பிலிப்பு**<br>யோவான் 1 : 43-46 | ஆயர் |
| | மாலை 6.45 | லித்தானியா ஜெபம் / மாலை ஆராதனை | ஆயர் |
| 21-02-10 ஞாயிறு | காலை 8.30 பரி.நற்கருணை | **தபசு நாட்களின் முதல் ஞாயிறு----பொருள் சார்ந்த வாழ்வும், அருள் சார்ந்த வாழ்வும்**<br>1 இராஜாக்கள் 21: 1-16, சங்கீதம் 49 : 1-7, 16-20, 1 யோவான் 2 : 15-17, மாற்கு 1 : 40-45 | ஆயர் |
| | மாலை 6.30 | வாலிபர் ஐக்கிய சங்கம் சிறப்பு ஆராதனை | |
| 24-02-10 புதன் | காலை 6.30 பரி.நற்கருணை | பரி. மத்தியாவின் திருநாள் | ஆயர் |
| 26-02-10 வெள்ளி | காலை 6.30 பரி.நற்கருணை | **தபசுகால இரண்டாம் வெள்ளி - லுக்கா ஒரு நற்செய்தியாளர் மற்றும் மருத்துவர்**<br>கொலோ 4 : 10-15 | ஆயர் |
| | மாலை 6.45 | லித்தானியா ஜெபம் / மாலை ஆராதனை | அருள் திரு. B. சார்லஸ் பிரபாகரன் |
| 28-02-10 ஞாயிறு | காலை 6.30 | பரி. நற்கருணை | ஆயர் |
| | காலை 8.30 காலைஆராதனை | **தபசு நாட்களின் இரண்டாம் ஞாயிறு மனித உறவுகள் - நம்பிக்கை, மதித்தல் அடிப்படையில்**<br>1 சாமுவேல் 18 : 1-4, 17-29, சங்கீதம் 55 : 4-22 பிலேமோன் 8-16, மத்தேயு 5 : 43-48 | ஆயர் |
| | காலை 11.00 | சிறப்பு தபசுகால ஒடுக்கக் கூட்டம் | N.M.S. |
| | மதியம் 3.00 | நற்செய்திப் பணி - கூடுவாஞ்சேரி | |
| | மாலை 6.30 | பாடல் ஆராதனை | திரு. T. இலாரன்ஸ் |



## My Christmas Gift

**In the first few days of April 2009, my mother suggested that we meet a gynecologist for treatment. At that time, I told within my heart, "Lord do not let a doctor share your glory, already once it has happened,not again." Our Almighty God is a jealous God who will not share the due glory to him with anyone.**

**Later, during the couples' prayer, I got a verse "He will give you the desires, of your heart (Psalms 37 : 4). I felt that it was a message for me and that prayer I had made within my heart had been answered. In the last week of April I did a home pregnancy test and it turned out positive. When I told my mother, she was stunned. Once confirmed, I was scared. I started to pray for my pregnancy "Lord I have crossed thirty, I am obese, I have had back pain, have undergone surgery in the back, I am on treatment for Wheezing and in spite of all these, I want a normal delivery and a healthy baby, only with you it is possible." Also my husband and I used to pray that each and every organ of the baby should be perfectly formed and that God knew the baby even before it was formed in the mother's womb (Jeremiah 1:5).**

**During the pregnancy, I had urinary tract infection and presence of bacteria. When I searched the internet, I read, it led to meningitis in neonatal. I started praying even more harder asking God to make all things beautiful. Other than this, God has led me beautifully during my pregnancy without complications. He also enabled me to go to office till 4th Dec 2009.**

**God has blessed me with a baby boy on 18th Dec 2009 as a Christmas gift. I was not a normal delivery but God knows what is good.**

**My husband and I stand in awe of our Almighty God whose love knows no boundaries. He never lets down those who trust in Him. We stand up to praise God and tell of His wonders.**

**I thank each and every one of you who have prayed for me. We all can say, our prayers have been answered, "Glory to God in the Highest".**

**- Angelyn Rajan**

### VERSE OF THIS MONTH

**How shall we escape if we neglect such a great salvation? It was declared at first by the Lord, and it was attested to us by those who heard him, while God also bore witness by signs and wonders and various miracles and by gifts of the Holy Spirit distributed according to his own will. --- Hebrews 2 : 3, 4**